கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)
சத்தியவேத
# பாதுகாவலன்
மலர்: 97 இதழ்: 5
மாசி 5 — 1972
பிரதி சதம் 15
"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது விண்"

# பல இடங்களிலும் ஒற்றுமை வைபவங்கள்

உலகிலே கிறிஸ்தவ சபைகள் மத்தியிலே தாம் ஒற்றுமைப்படவேண்டுமென்ற ஆவல் தொட்டிருப்பது வெளிப்படையே. சகல சபைகளும் விசுவாசத்திலும் ஒரே தலைமையிலும் ஒன்றுபடுவது இலேசான கருமமன்று. எனினும் கணிப்புக்குரிய முன்னேற்றம் நாளடைவில் காணப்பட்டுவருகின்றது. பல கிறிஸ்தவ சபைகளும் ஒன்றுசேர்ந்து தேவனைப் பிரார்த்திப்பது சர்வசகஜமாகிவிட்டது. பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் தமது சிற்றாலயமான சென்ஜோன் லத்தறன் தேவாலயத்தில், இத்தாலியின் மறு கிறிஸ்தவ சபைத் தலைவருடன் ஒன்றுசேர்ந்து ஒற்றுமை வைபவத்தில் பிரார்த்தித்துக்கொண்டார். அதுபோலவே, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய பல இடங்களிலும் எமது நாடாகிய இலங்கையிற் பல பிரிவுகளிலும் ஒன்றுசேர்ந்து பல கிறிஸ்தவசபைகளும் தேவனைப் பிரார்த்தித்துக் கொண்டனர். மேலும் சமூக சேவைகளிலும் தர்ம கருமங்களிலும் பெரும் ஒத்துழைப்பு கிறிஸ்தவ சபைகளிடம் முன்னிலும் அதிகமாகக் காணப்படுகிறது. முற்றான ஒன்றிப்பு விரைவில் கிறிஸ்தவசபைகள் அடைவதற்கு விசுவாசத்துடன் செபித்தல் அவசியமாகும்.

# தமிழாராய்ச்சி மகாநாடு

முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு மலேயாவிலும், இரண்டாவது மகாநாடு தமிழ்நாட்டிலும், மூன்றாவது மகாநாடு பிரான்சிலும் நடைபெற்றன. இவைகளைத் தொடர்ந்து நான்காவது மகாநாடு யாழ்ப்பாண மாநகரிலே அடுத்து நிகழும் 1973 ஆம் ஆண்டு தைமாதம் 3ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை நடைபெறும். வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகளார் தலைமையில் சென்ற தை மாதம் 29 ஆம் திகதி நடந்தேறிய ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவுசெய்யப்பட்டது. மகாநாட்டுக்கு இலங்கை முழுவதிலுமிருந்து 100 பிரதிநிதிகளையும், இந்தியாவிலிருந்து 50 பிரதிநிதிகளையும், ஏனைய நாடுகளிலிருந்து 50 பிரதிநிதிகளையும் அழைப்பதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது. மகாநாட்டினை நடத்துவதற்குச் சுமார் இரண்டு இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## தனிநாயக அடிகளார் ஆற்றிய பங்கர்ஞாபக சொற்பொழிவுகள்

30 வருட காலத்துக்கு மேற்பட்ட யாழ்ப்பாணக் கலலூரிச் சேவையின் அதிபராகவும், இலங்கையிலே பேர்பெற்ற பண்பாளராகவும் விளங்கி மூன்று வருடங்களுக்கு முன் காலஞ்சென்ற பங்கர் அடிகளாரின் ஞாபகத்தை மக்கள் மனதில் நிலைநாட்டச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளுள் அவர் பெயரால் நடைபேறும் சொற்பொழிவுகளும் ஒன்றாகும். இரு வருடங்களுக்கு முன் இந்தியாவில் கல்வித்துறையில் பெயர்பெற்றவராகிய செயூட் அவர்கள் இங்கு அழைக்கப்பெற்று அஞ்ஞாபக சொற்பொழிவுகளை ஆற்றினர். இஞ்ஞாபக செயலின் தொடர்ச்சியாக இவ் வருடம் எமது நாட்டின் கல்விமான்களுள் முதல் வரிசையில் விளங்கும் வணக்கத்துக்குரிய பிதா சேவியர் தனிநாயகம் அடிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அவர் தை மாதம் 28ஆம், 29ஆம், 30ஆம் திகதி மூன்றுநாட்கள் மாலை 6-15 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில தேம்பிநின்ற அறிவாளர் கேட்டுச் சிந்தித்து மகிழத்தக தமது சொற்பொழிவுகளை ஆற்றினர். முதலாம், மூன்றும் நாட்களில் சொற்பொழிவுகள் ஆங்கிலத்தில் நடைபெற்றன. இரண்டாம் நாள் தமிழில் நடைபெற்றது. தமிழின் தொன்மையும், தன்மையும், தமிழிலக்கியத்தில் தொனிக்கும் மனித இன நலக் கொள்கையும் அடிகளார் விளக்கிய விஷயங்களாகும்.

### டபிளின் நகர புதிய அதிமேற்றிராணியார்

டபிளின்நகர அதிமேற்றிராணியாராக டேர்மற் றயன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார் என்னும் செய்தி சென்ற வாரம் அறிவிக்கப்பட்டது. அயர்லாந்துதேச முன்னேற்றத்தில் பரிசுத்த தந்தைக்கு உள்ள விசேஷ அன்பின் காரணமாக அத் தேசபிரதான நகர அதிமேற்றிராணியாரைத் தாமே அபிஷேகம் செய்துவைக்க 6ஆவது சின்னப்ப பாப்பரசர் சித்தமாயிருக்கின்றார். அவருடன் உலகின் பிலதேச மேற்றிராணிமாராக நியமிக்கப்பட மேலும் ஐவரும் பரிசுத்த தந்தையின் கரங்களினாலே மாசி மாதம் 13ஆம் திகதி அபிஷேகிக்கப்படுவர். றயன் அடிகளார் 47 வயது நிரம்பியவர். அயர்லாந்துதேச மறு மேற்றிராணிமாரிலும் இளையவர் மாத்திரமன்று உயரத்தால் கூடியவருமாவர். தேகாப்பியாசத்துக்காக பல வகை விளையாட்டுக்களிலும் பங்குபெறுபவர்.

✻ பிரான்சிய ஜனாதிபதியாய் விளங்கியிருந்து காலஞ்சென்ற ஜெனறல் தெகோல் அவர்கள் மரணமடைந்த மூதலாம் ஆண்டு நிறைவு தினம் சமீபத்தில் வந்தபோது பிரான்சின் முன்னாள் யுத்த வீரர்களான சுமார் 15,000 பேர் அவருடைய கல்லறையைச் சந்தித்து, நான்கு மணித்தியாலங்களாகப் பதமையாக அதைச்சுற்றி வலம்வந்து அஞ்சலிசெய்துதிரும்பினார்கள்.

## டொம்மின்ரோவ் பரி. தந்தையைச் சந்தித்தார்

இவ்வருடம் தைமாசத்தின் முன்பாகவே மோல்ராதீவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி சம்பந்தமாக மோல்ரா தீவுப் பிரதமர் டொம்மின்ரோவ் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசரை அண்மையில் சந்தித்துப் பேசியிருக்கிறார். டொம்மின்ரோவ் மோல்ராவின் வறுமையின் காரணமாக அதிகாரத்துக்கு அத்தேச மக்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர். அவரது இடதுசாரிக் கொள்கைகளால் தமது நாட்டுக்கு விமோசனம் ஏற்படுமென மோல்ராதீவு மக்கள் நம்பி அவரைத் தெரிந்தெடுத்துக்கொண்டனர். ஆரம்பத்தில் அவருக்கிருந்த தீவிர கொள்கைகளை அவர் சற்று மாற்றிக்கொண்டதன் காரணகாக, மோல்ராதீவு அதிமேற்றிராணியார் கொன்சி அடிகளார் அவருக்குச் சமீபத்தில் நாட்டின் நெருக்கடியைத் தீர்க்கத் தன்னாலான உதவிகள் செய்துவருகின்றார்.

### "கிறிஸ்தியன் பிறதர்ஸ்" சந்நியாசசபைத் தலைவர் இலங்கை விஜயம்

உலகின் பலபாகங்களிலும் கல்வி வேலையில் ஈடுபட்டிருக்கும் "கிறிஸ்தியன் பிறதர்ஸ்" என அழைக்கப்படும் சந்நியாச சபையின் இன்றைய தலைவர் அதி சங்கைக்குரிய சார்ள்ஸ் ஹென்றி சகோதரர் இலங்கைப் பிரிவிலடங்கியுள்ள தமது சபை ஸ்தாபனங்களை நேரில் காண்பதற்காகச் சென்றவாரம் விமானமார்க்கமாக இலங்கை வந்து சேர்ந்திருக்கிறார். பண்டாரநாயகா விமானதளத்தில் இலங்கைப் பிரிவு அதிபர் லோறன்ஸ் சகோதரரும், டிலாசால் ஸ்தாபனங்களின் பொதுக் காரியதரிசியும் அவரை வரவேற்றனர். அவர் சிலதினங்கள் இங்கு தங்கி இப் பிரிவிலடங்கிய சகல நிறுவனங்களையும் நேரிற் சென்று கண்டுகொள்ளுவார். இலங்கைப் பிரிவில் தென் இந்தியாவும் அடங்கியுள்ளது. சார்ள்ஸ் அடிகளார் ஓர் [illegible] ரிக்கர். கல்வித்துறையில் அதி கீர்த்திபெற்றவர்.

## திராவிட தேசத்தின் மகிமை மகன் நல்லூர் சுவாமி சா. ஞானப்பிரகாசர், மா. ம. தி.

(சென்றவாரத் தொடர்ச்சி)

**அவரது வரலாற்று நூல்கள் :**

இக்காலத்தில் அவர் யாழ்ப்பாணச் சரித்திர சங்கத்தின் அக்கிராசனராகவும், யாழ்ப்பாண கிளைத்தேச ஆராய்ச்சிக் கழகத்தின் உபதலைவராகவும் தெரியப் பெற்றார். இவண், இன்னும் இடம்பெறாத அவரது சரித்திர நூல்கள் பின்வருவன. யாழ்ப்பாண சத்தியவேத சரித்திரம், யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் 25வருட சத்யவேத முன்னேற்றம், இலங்கைச் சத்தியவேத சரித்திரம், மருதமடுத் திருப்பதிச் சரிதை, தமிழருட்சாதியுற்பத்தி, இந்திய புராதன நாகரீகமும் காலநிர்ணயமும், சத்தியவேத புத்தசமய சரித்திரக் குறிப்புக்கள், சத்தியவேதமும் மறு சமயங்களும் சந்திக்குமிடம், இவைகளில் விளங்கிய பரந்த அறிவும் ஆழ்ந்த ஆராய்வும் யூகமுள்ள யாழ்ப்பாண மக்களைக் கவர்ந்தது. சிவந்தரான அறிஞர்களிடையே இவரே சிறந்தவரென்று மரியாதை செய்தனர். சொந்த நாட்டிலே செல்வாக்குப்பெற்ற சொல்வல்லார் இவரொருவர் அல்லவா? இராச ஆசிய சங்க இலங்கைக் கிளையின் அங்கத்தவராக அநேக அறிவு நிறைந்த கட்டுரைகளைச் சுவாமி ஞானப்பிரகாசர் அளித்திருக்கிறார். நியமித்த அங்கத்தவர் ஒருவர் கட்டுரையின் நகலை நேரத்துக்கு அளிக்காதபோது சுவாமி ஞானப்பிரகாசரிடம் சரண் புகலாம் என்று சங்கத்தின் காரியதரிசி அறிந்திருந்தார். அவ்வேளைகளில் அறிவுக்கும் ஆராயச்சிக்கும் உற்சாகந் தரும் உடன் உரைகள்மூலம்

(தொடர்ச்சி 4-ம்பக்கம்)

## பின்னே காலடி வைத்து நடந்த 170 மைல் தூர யாத்திரை

மனிதர் உண்மையான நாகரீகமுறைகளில் பின்செல்கின்றார்கள் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்ட இளம் ஸ்பானிய வாலிபர் அறுவர் ஒரு புது முறையை அண்மையில் கையாண்டனர். ஸ்பானிய தேசத்தில் சன்ரியாகோ டி கொம்பெஸ்ரெலா என்னும் இடத்திலுள்ள திருயாத்திரை ஸ்தலத்துக்கு பரிசுத்த வருடத்தில் சென்ற பல்லாயிர மக்களுள் இவர்களும் அறுவர். யாத்திரை ஸ்தலத்திலிருந்து தமது ஊருக்குச் செல்ல உள்ள தூரம் 170 மைலையும் பின்னே காலடிவைத்து நடந்து இந்த விநோதமான முறையில் தமது நோக்கத்தை நிறைவேற்றினர். இவ்வாறு பின்னடையாகச் செல்லும்போது இவர்களுக்கு உதவியாக நிலக் கண்ணாடிகளைச் சிலர் தாங்கிச்சென்று பின்புறத்திலுள்ள தடைகளை அவர்கள் அறியச் செய்தனர்.

### செக்கோசிலவாக்கியாவில் முறைகேட்ட தடைகள்

செக்கோசிலாவாக்கியாவில் மீளவும் வெளிநாட்டுப் பிரசுரங்களுக்குக் கடுமையான தடைகள் விதிக்கப்பட்டுவருகின்றன. இரு வருடங்களுக்கு முன்னிருந்த பிரதமர் டூபெக் சற்று இழக்காரமான முறைகளைக் கையாண்டுவந்தாரெனப் பிழை காணப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்பட்டதன்பின் மீளவும் நிலைமை கொம்யூனிஸ்த ஆட்சி அங்கே நிலைநாட்டப்பட்ட காலத்திற்போல கடுமையாகிவருகின்றது. வெளிநாடுகளிலிருந்து பத்திரிகைகளோ, பிரசுரங்களோ எவரும் பெறமுடியாதிருக்கின்றது. அனுதாபிகள் அங்குள்ள ஸ்தாபனங்களுக்கு அனுப்ப முயற்சித்த விபிலிய நூல்கள் அடங்கிய தபால பார்சல்கள் முற்றாகத் திருப்பியனுப்பப் பட்டிருக்கின்றன. வத்திக்கானிலிருந்து அங்குள்ள ஆயர்மாருக்கு அனுப்பப்படும் கடிதங்கள், பிரசுரங்களுக்கும் அதேகதிதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சத்தியவேத பாதுகாவலன்

# உண்மையான நாட்டுப்பற்று

தாம் பிறந்த நாட்டின்மீது பற்றுதல் கொள்வது மக்களுக்கு இயற்கையானது. ஒருவர் தம் தாய் தந்தையர் மீதும், தாம் வாழும் சமூகத்தின்மீதும் பற்றுதல் கொள்வது போன்றதுதான் இதுவும். யாராகிலும் தமது குடும்பத்தையோ, சமூகத்தையோ இழிவுபடுத்துவதை விரும்ப மாட்டார்கள். பிறர் தாக்கிப் பேசினல் அவர்களோடு சண்டைக்கும் போய்விடுவார்கள். ஆனல், இதே மக்கள் தமது பெற்றூர் மட்டிலுள்ள கடமைகளை பிரமாணிக்கமாய் நிறைவேற்றுகிறவர்களாயும், தமது சமூகத்துக்காகப் பாடுபட்டுப் பணி செய்பவர்களாயும் இருப்பது சந்தேகமே. நாட்டுப்பற்றைப் பொறுத்த மட்டிலும் இதே கதைதான். நாட்டின் நலனைப்பற்றி, பெருமைபற்றி அதிகமாகப் பேசிவாதிடுகிறவர்கள்தான் நாட்டிற்கு அதிக பணி செய்கின்றனர் என்று சொல்வதற்கில்லை. பெரும்பாலும் உண்மை இதற்கு நேர் மாறுகவே உள்ளது.

நாடு என்பது இன்று பெரும்பாலும் ஒரு நாட்டின் அரசாங்கத்தைக் குறிக்கும் சொலலாக மாறிவிட்டது. அரசாங்கம் மட்டும் நாடல்ல. மண்ணும், மலையும், மாமும், விளங்கும் நாட்டின் அம்சங்களாயினும் அவற்றையும் நாம் நாடு என்று சொல்வதற்கில்லை. உண்மையில் நாடு என்பது அங்கு வாழும் மக்கள்தான். அந்த மக்கள் மீது உள்ள அன்பு, அவர்களது நலனில் அக்கறை, இதுதான் உண்மையான நாட்டுப்பற்று. இதன் விளைவாக எழும் செயல்களே நாட்டுக்கு நன்மை செய்யக் கூடியனவாகும். இச்செயல்களை இரண்டு பகுப்புகளுள் அடக்கலாம்—ஒன்று மக்களின் நலனுக்கேதுவாய காரியங்களில் ஈடுபடுதல், மற்றது மக்கள் நலனுக்கு குந்தகமானவற்றை விலக்குதல்.

பெரும்பாலான மக்கள் இடையருது தமது சொந்த அலுவல்களில் மூழ்கியிருப்பதனுல் நாட்டுப்பணிபற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. அவர்களுடைய நாட்டுப்பற்றைத் தட்டியெழுப்பக் கூடிய பேராபத்தோ, போரோ வழக்கமாக ஏற்படுவதில்லையாதலால் இந்த அசட்டையான சீவியத்தில் நிலைத்து விடுகின்றனர். பொதுநலனைப்பற்றிய சிரத்தையின்றி வாழ்கின்றனர்.

ஆனல், நாட்டில் பிரச்சினைகளோ ஏராளமாக மலிந்து கிடக்கின்றன. எம்மைச் சூழவர வறுமை, நோய், வேலையில்லாத் திண்டாட்டம், வீடில்லாப் பிரச்சினை, லஞ்ச ஊழல், குற்றங்கள் அதிகரிப்பு போன்ற எத்தனையோ தீங்குகள் மக்களைத் துன்புறுத்துகின்றன. நாட்டின் நலனைச் சீர்குலைக்கும் இந்த ஏதுக்களைக் குறித்து நாம் செய்யக்கூடியது என்ன என்று சற்றுவது சிந்தித்தோமா? சமூகத்தில் நிலவும் சாதாரண குறைபாடுகளைத் தீர்த்துவைக்க, மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, அறிவை வளர்க்க, ஒழுக்கநெறியில் அவர்களை வழிநடத்த எல்லாரும் முன் வந்து முயற்சி செய்தால் இன்று நாட்டில் மலிந்துள்ள தீங்குகள் எவ்வளவோ குறைந்துவிடும்.

## ரன்சேனியதேச முன்னேற்றத்தின் இரகசியம்

ஆபிரிக்ககண்ட ரன்சேனியாதேசம் பிரித்தானிய ஆட்சியிலிருந்து சுதந்திரம்பெற்றுப் பத்துவருடங்கள் கழிந்துவிட்டன. 10 வருடங்களிலும் அத்தேசம் அடைந்துள்ள முன்னேற்றத்தை பகில உலகமும் அறிந்துகொள்வதற்கு அக்கொண்டாட்டத்துக்குச் சமுகம்தர உலகநாட்டுத் தலைவர்களுக்கு ரன்சேனியா தேச ஜனதிபதி நயறேறே அழைப்பு அனுப்பியிருந்தார். அங்கு சென்றவர்கள் கண்டது யாது? தீவிரமுன்னேற்றத்தையல்ல, அங்கே அமைதியையும் சமாதானத்தையும் கண்டனர். இதன் காரணம் யாது? ஜனதிபதி நயறேறே நாடுவிடுதலையடைந்தபோது அதன் மக்களுக்கு அளித்தது இரண்டுகொடைகள், அவை சுயாதீனமும் பிரயாசமுமாகும். அவர் ஓர் உத்தம கத்தோலிக்கர். ஆங்கிலரின் ஆட்சிக் காலத்தில் நிலவிய முறைகள் எல்லாவற்றையும் அவர் தட்டிக்கொட்டவில்லை. அதன் அத்திவாரத்தில் அவர் கட்டி எழுப்பினர். நாட்டில் பலசமயத்தவர் உளர். யாவரும் அரசாங்கத்துக்கு பூரண ஒத்துழைப்பு நல்கி சந்தோஷமாக வாழ்கின்றனர். சுமார் 2000 குருமார், கன்னியர்கள் தொண்டு புரிகின்றனர். ஆபிரிக்ககண்ட முதற்கருதினலை உலகுக்கு ஈந்ததும் இத்தேசமாகும்.



# இறைவாக்கு வழிபாடு

ஆண்டின் 5ஆம் ஞாயிறு

## வெறும் வார்த்தைகள் பயனற்றவை!

**முன்னுரை :**

நம்மில் செயலாற்றும் கிறீஸ்துவின் வல்லமையே நாம் நற்செயல்களைப் புரிவதற்கு நமக்கு ஆற்றல் அளிக்கின்றது. இந்த நற்செயல்களே நாம் மற்றவர்களைக் கிறிஸ்துவிடம் இட்டுச் செல்வதற்குப் பயன்படும்.

**1ஆம் வாசகம் :**

இசை. 58: 7—10. இரக்கச் செயல்களைப் புரிவோர் கடவுளின் உதவியைப் பெறுவர்.

**2ஆம் வாசகம் :**

1கொரி. 2: 1—5. அவர்களின் விசுவாசம் மனித ஞானத்தில் ஊன்றியிராமல் கடவுளின் வல்லமையிலே ஊன்றியிருக்கத் தக்கதாகப் புனித சின்னப்பர் கொரிந்தியரிடையே சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப்பற்றிய அறிவையே வளர்த்தார்.

**சுவிசேஷம் :**

மத். 5: 13—16. நமது நற்செயல்கள் கடவுளின் நன்மைத் தனத்தை ஓரளவு பிரதிபலிப்பதால் கடவுளைப் புகழ்ந்து போற்றுவதற்கு மனிதரைஅவை ஊக்குவிக்கின்றன.

**திருவுரைக் குறிப்புகள் :**

உலகில் திருச்சபை புரிய வேண்டிய ஓர் உன்னத பணி உண்டு. அதைப் புரிவதற்கு ஆயர்கள், குருக்கள் மாத்திரம் கடமைப் பட்டவர்கள் எனக்கருதுவது தவறு. அது நம் அனைவரையும் சார்ந்த கடமையாகும். நாமே உலகின் உப்பு; நாமே உலகின்ஒளி. எனவே, நாம் எவ்வாறு மக்களின் மனதை மாற்ற முடியும்? அதற்கு வெறும் வார்த்தைகள் பயனற்றவை. நாவன்மை மிக்க புனித சின்னப்பரே அதை வலியுறுத்துகிறூர்; நமது நற்செயல்கள் வழியாகவே நாம் மக்களை மனந்திருப்ப முடியும்.

பசித்திருப்பவர்க்கு உணவூட்டுவது, ஆடையற்றவர்க்கு ஆடையளிப்பது, இல்லிட மற்றவர்க்குப் புகலிடம் அளிப்பது போன்ற நற்செயல்கள் வழியாகவே நாம் அதைச் சாதிக்க முடியும். அப்போதுதான் இசையாஸ் கூறுவதற்கொப்ப நம் ஒளி அருணோதயம்போல் அவர்கள்முன் ஒளிரும். நமது வார்த்தைகள் வழியாகவன்று; ஆனல், நமது நற்செயல்கள் வழியாகவே மக்கள் நமது வானகத் தந்தையைக் காண்பார்கள்.

இ. மரியவளன்

## கருதினல் கூறே அடிகளாரின் அன்பளிப்பு

வட கொழும்பு வீட்மைப்புத் திட்டத்துக்கென கருதினல் கூறே அடிகள் காணித்துண்டொன்றை ஏற்கனவே அன்பளிப்புச் செய்திருந்ததை நேயர்கள் அறிவர். இந்தக் காணித்துண்டில் வீடமைப்புத் திட்டமொன்றைச் செயல்படுத்த வீடமைப்பு அமைச்சு நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது. இந்த வீடமைப்புத் திட்டத்துக்கு உதவியாக கருதினல் அடிகள்70,000ரூபாவைஅண்மையில் அன்பளிப்புச்செய்திருக்கிறூர். இந்நிலத்தில் பல மாடிகளைக்கொண்ட வீடுகளை வரிசைக்கிரமமாகக்கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## பூசை வழிகாட்டி
### மாசி மாதம்—1972

6. ஞாயிறு : ஆண்டின் 5-ம் ஞாயிறு [ப]
   **வாசகங்கள் :** இசை 58 : 7—10
   1 கொரி. 2 : 1—5.
   மத். 5 : 13—16.

7. திங்கள் : நாட்பூசை [ப]
   **வாசகங்கள் :** 3அரச. 8 : 1—7, 9—13.
   மாற். 6 : 53—56.

8. செவ்வாய் : நாட்பூசை [ப]
   (அ) புனித யெரோம் எமிலியான் [வெ]
   **வாசகங்கள் :** 3அரச. 8 : 22,23, 27—30
   மாற். 7: 1—13.

9. புதன் : நாட்பூசை [ப]
   **வாசகங்கள் :** 3அரச. 10 : 1—10.
   மாற். 7 : 14—23.

10. வியாழன் : புனித ஸ்கொலஸ்திக்கா [வெ]
   **வாசகங்கள் :** 3 அரச. 11: 4—13.
   மாற். 7 : 24—30.

11. வெள்ளி : நாட்பூசை [ப]
   (அ) புனித லூர்துமாதா [வெ]
   **வாசகங்கள் :** 3அரச. 11 : 29—32, 12:19.
   மாற். 7 : 31—37.

12. சனி : நாட்பூசை [ப]
   **வாசகங்கள் :** 3 அரச. 12: 26—32
   13: 33—34.
   மாற். [illegible] 1—10

## 6ஆவது சின்னப்பருக்கு அளிக்கப்பட்ட அமெரிக்க மதிப்பு

அமெரிக்காவில் மிக மதிக்கப்படுபவர் யார் என அறிந்துகொள்ள "கலப்போல்ஸ்" நிறுவனத்தாரால் நடாத்தப்பட்ட தேர்தலில் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசர் ஒரு பிரதம இடத்தைப் பெற்றுள்ளார். முதலிடம் பெற்றவர் ஜனதிபதி நிக்சன் அவர்களே. பரிசுத்த தந்தையைத் தவிர்ந்த ஏனையவர் யாவரும் அமெரிக்கர்களே. ஆகவேபிற நாட்டவர் எவரிலும் அமெரிக்கர் இன்று பெரிதாக மதித்துக்கொள்பவர் பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்ப பாப்பரசரே.

## கிறிஸ்தவ—இஸ்லாமிய உறவு

உலக கிறிஸ்தவ சபைகளின் சங்க உயர் பதவியாளர்களில் ஒருவரும், பிற சமயத்தவர்களுடன் தொடர்புகொள்ளும் கருத்துக்குப் பொறுப்பாளருமாகிய டக்டர் ஸ்ரான்லி சமர்த்தா என்பவர் இவ்வருட நடுப்பகுதியில் உலக கிறிஸ்தவ சபையினர் இஸ்லாமிய மதபீடத்துடன் பரந்த தொடர்புஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கின்றனரென அறிவித்திருக்கிறூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனைவரையும் அழைக்கின்றோம்

நிகழும் மாசித்திங்கள் மூன்றும்நாள்; இந்நாள் திருக்குடும்ப கன்னியர்சபை வரலாற்றிலே ஒரு பொன்னுள்! இற்றைக்கு 150ஆண்டுகட்கு முன்பு, இச்சபையின் ஆரம்பகாலத்தின் ஒருநாளில்— 1822-ம் ஆண்டு சத்திரிகை ஞாயிறன்று திருவழிபாட்டிற்காகத் தேவாலயத்திற் குழுமியிருந்தனர் சபையின் ஆதிக் கன்னியர். நற்கருணை ஆசீர்வாதவேளை— விசுவாசிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்காகக் குருவானவர் நற்கருணைப் பாத்திரத்தை எழுந்தேற்றம் பண்ணினுர். என்னே புதுமை! நற்கருணை அப்பத்திற்குப் பதில் வாழ்வளிக்கும் கிறீஸ்துவே விருந்தினராக அப்பத்திற் காட்சிதந்தார்; திருக்கரமுயர்த்திச் சபையினரை ஆசீர்வதித்தார். இக்காட்சி ஒருசில நிமிடங்களுக்கு நீடித்தது. தேவாலயத்திற் சமுகமாயிருந்தோர் யாவரும் இப்புதுமைக்குச் சான்று பகர்ந்தனர். இப்புதுமையின் 150-வது ஞாபகார்த்த வருடமாக இவ்வாண்டு இருப்பதால், கடந்த ஆண்டுகளிற் போலவே, ஆனுல் சிறப்பாக இவ்வாண்டும் மாசித்திங்களில் வரும் முதல்ஞாயிறு தினத்துக்கு முந்திய மூன்று நாட்களில் 3-ம், 4-ம், 5-ம் தேதிகளில் ஒரு திரிதின வழிபாடு நடைபெறும்.

நற்கருணையில் எம்மிடையே பிரசன்னமாய் இருக்கும் கிறீஸ்துவுக்கு நன்றிசெலுத்தவும், இத்தெய்வீக பிரசன்னத்தில் எம் விசுவாசத்தைப் புதுப்பிக்கவும் ஏற்ற இச்சந்தர்ப்பத்தில், எமது உபகாரிகள், அன்பர்கள், வாசகநேயர்கள் அனைவரையும் நினைவுகூருகின்றோம். எமது நன்றித்துதி வழிபாட்டில் மனதினுலாவது எம்முடன் ஒன்றிக்குமாறு உங்கள் அனைவரையும் மகிழ்வுடன் அழைக்கின்றோம்!

## கொழும்பு சென் பீற்றர்ஸ் கல்லூரியின் 50 ஆண்டு நிறைவு

கொழும்பு நகரின் தென்பாகத்திலுள்ள பம்பலப்பிட்டிப் பகுதியில் 50 ஆண்டுகளுக்குமுன் அக்காலத்தில் பிரசித்திமிகப் பெற்றிருந்த சென்ஜோசப் கல்லூரி அதிபராகிய மகாவணக்கத்துக்குரிய M. J. லெகொக் சுவாமியாரால் ஆரம்பிக்கப்பட்ட சென்பீற்றேர்ஸ் கல்லூரியின் 50 ஆண்டு நிறைவு கடந்த வாரம் அவ்விரு கல்லூரி ஆசிரியர் மாணவரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 1922-ம் ஆண்டு தைமாதம் 22-ம் திகதி அதிவணக்கத்துக்குரிய லெகொக் சுவாமியார் சென்ஜோசப் கல்லூரி மாணவர் 50 பேருடன் மருதானையில் புகைவண்டியிலேறி பம்பலப்பிட்டி ஸ்தானத்தில் இறங்கி, கொழும்பு தெற்குப் பிரமுகர், மாணவர் பலருமடங்கிய கூட்டத்தினரால் சென்பீற்றேர்ஸ் கல்லூரி இன்று காட்சி அளிக்கும் இடத்துக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டுப் புதியகல்லூரியை அன்று ஆரம்பித்து வைத்தார். அந்நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தும் தன்மையில் தைமாதம் 22-ம் திகதி அன்று சென்ஜோசவ் கல்லூரியின் அதிபராக விளங்கும் வண. மேர்வின் வீரக்கொடிச் சுவாமியார் 250 மாணவருடன் அத்தகைய பிரயாணம் செய்து பம்பலப்பிட்டி ஸ்தானத்திலிறங்கி மாணவர் மாணவிகள டங்கிய கூட்டத்துக்கு தற்போது சென் பீற்றேர்ஸ் கல்லூரி அதிபராகிய வண. தியடோர் பீரிஸ் சுவாமியார் தலைமைதாங்க ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டார். ஒரு வாரகாலமாக பதவித வைபவங்களாலும் சிறப்புற்ற இக்கொண்டாட்டம் கருதினுல்கூறே அடிகளார், இக்கல்லூரி முன்னுள் இன்றைய அதிபர், குருமாருடன் கூட்டுப்பூசை ஒப்புக்கொடுத்ததுடன் முடிவடைந்தது.

## ஆபிரிக்காவில் கத்தோலிக்க திருச்சபையின் முன்னேற்றம்

வத்திக்கானில் உத்தியோகபூர்வமாக அண்மையில் வெளிப்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து கத்தோலிக்க திருச்சபை இருபது பிரதேசங்களில் கணிப்புக்குரிய முன்னேற்றம் அடைந்திருப்பது வெளிப்படையாகின்றது. இம் முன்னேற்றம் விசேஷமாக ஆபிரிக்க நாடுகளிலேயே காணப்பட்டுள்ளது. சென்ற சிலகாலமாக ஆபிரிக்கநாடுகளிலே தோன்றிய முன்னேற்றம் அங்கு அண்மையில் எழுந்திருக்கும் தேசிய உணர்ச்சியினுல் குன்றிவிடாது அபிவிருத்தி அடைந்துவருவது மகிழ்ச்சிக்குரியதே.

## நன்றி

மலேசியாவிலே அண்மையில் நடந்த தம் திருமணத்தின்போது தமக்கு இலங்கையிலிருந்து நல்வாழ்த்துக்கள் அனுப்பிய உற்ருர், உறவினர்க்குத் தங்கள் நன்றியை றெக்ஸ் கிறிஸ்ரி மைக்கல் தம்பதிகளும், அவர்களின் பெற்ருேரான டீ. மைக்கல் தம்பதிகளும், ஜேம்ஸ் அந்தோனிப்பிள்ளை தம்பதிகளும் அறிவித்துக் கொள்கின்றனர்.

100, ஜவான் காசிங்,
பெற்ருலிங் ஜய,
மலேசியா.

## தப்பான அபிப்பிராயம் நீக்கப்பட்டது

ஆங்கில நாட்டிலே பிரதான மேற்றிராசனமாகிய வெஸ்றமினிஸ்ரர் அதிமேற்றிராசனத்திலே அதன் ஆயராகிய கருதினுல் ஹீனன் அடிகளார் நடாத்திவரும் கத்தோலிக்கசமய அறிவுபுகட்டும் கல்லூரியாகிய 'கோர்புஸ் கிறிஸ்ரி' கல்விஸ்தாபனத்திலே நிலவிவந்த சில தப்பபிப்பிராயங்களைக் கருதினுல் ஹீனன்அடிகளார் தயக்கமின்றி அண்மையில் விளக்கியிருக்கின்ருர். அக்கல்லூரியின் சுயாதீனபரிபாலனத்தில் அடிகளார் அவசியமின்றி அடிக்கடி தலையிடுகின்ருர் என்ற குறை எழுந்தது. அதன் காரணமாக அந்நிலையத்து ஆசிரியர்கள், தலைமைக்குருவரும், சில கன்னியர்களும் உட்பட, பலர் தமது பதவிகளைத் துறந்துவிட்டனர். தான் பரிபாலனத்தில் சில சமயங்களில் தலையிட்டது உண்மையெனக் கருதினுல் அடிகள் ஒப்புக்கொள்கிருர். அதற்குக்காரணமும் கொடுத்திருக்கிருர். அந்நிலையத்தில் சேரும் மாணவரைத் தெரிந்தெடுக்கும் முறைகளையும், அங்கு உயர் வகுப்பு மாணவருக்கு நடாத்தப்பட வேண்டிய போதனு முறையின் தன்மையையும் தான் ஆரம்பத்திலேயே குறித்திருந்த போதிலும், அவற்றுக்கு ஆசிரியர் போதிய கவனம் செலுத்தாததே காரணமாகும் எனச் சுட்டிக் காட்டியிருக்கிருர். சரியான முறையில் அந்நிலையம் கொண்டு செல்வதற்கு அவர் காட்டிய முறைகள் அவசியமென அவர் கருதுவதால், பதவி ராஜிநமாக்களை ஒப்புக்கொண்டு புதியவர்களை அப்பதவிகளில் நியமித்திருக்கிருர்.

## மொஸ்கோவில் பிந்திய நத்தார்

ருஷியாதேச 'ஒதொடொக்ஸ்' முறைக் கிறீஸ்தவர்கள் வழமைப்பிரகாரம் தமது நத்தார்த் திருநாளை மேற்குத் தேச நத்தார்த்தினத்துக்கு 13 நாட்களுக்குப் பிந்தியே கொண்டாடினர். ருஷியாவின் கிறிஸ்தவர்கள் ஜூலியன் அட்டவணையின் பிரகாரம் திருநாட்களைக் கொண்டாடுவதே இதற்குக் காரணமாகும். இவ்வருடம் மொஸ்கோவிலுள்ள தேவாலயத்தில் வழமையிலும் கூடிய தொகையினர் காணப்பட்டனர்; தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பிதாப்பிதா பிமென் அடிகளார் வைபவத்தை நடத்திவைத்தார். கூடியிருந்தவர்கள் பெரும்பாலும் வயோதிபரும் மத்திய வயதுடையவருமாவர், எனினும் வழமையிலும் கூடிய தொகையினராக இளைஞரும் சமூகமளித்திருந்தனர். வைபவத்தை வழமைபோல் எதிர்த்துப் சப்திக்கும் கோஷ்டிகள் இருக்கவில்லை. பொலிசாரின் அடக்குமுறைகளும் இவ்வருடம் அதனுல் தேவைப்படவில்லையெனக் கூறப்படுகிறது.

## அறிவித்தல்

### யாழ்ப்பாண மேற்றிராசன சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண மேற்றிராசன சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 1972-ம் ஆண்டு மாசிமாதம் 28-ந்தேதி திங்கட்கிழமை (விடுமுறை நாள்) நடைபெறும். காரிய திட்டம் பின்வருமாறு:

காலை 9-00: யாழ்ப்பாண ஆசனக்கோவிலில் மேற்றிராணியாரின் திவ்விய பூசை.

காலை 10-00: சம்பத்திரிசியார் கல்லூரிச் சாலையில் வருடாந்த பொதுக்கூட்டம்.

**பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரல்:**

1. கடந்த வருடாந்த பொதுக்கூட்டக் குறிப்புகள்.
2. வருடாந்த அறிக்கை.
3. மேற்றிராணியாரின் உரை.
4. சங்க உத்தியோகஸ்தர் உட்பட, நிர்வாக சபையைத் தெரிவு செய்தல்.
5. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியார் பற்றிய கருத்துரைகள்.
6. ஐந்து நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட வேறேதேனும் கருமங்கள்.

பொதுக் கூட்டம் முடிந்தவுடன் புதிய நிர்வாகசபை கூடும்.

அங்கத்தினர் அனைவரும் சமுகமளிக்கும்படி தயவாகக் கேட்கப்படுகின்றனர்.

எஸ், எம். ஜே. லூயிஸ்,
செயலாளர்.

தபால்பெட்டி இல. 2,
யாழ்ப்பாணம்.

## நிலப்பாவாடை யாருக்கு? சுமந்த கழுதைக்கா?

சென்றவாரம் மொறெட்டுவாப் பகுதியில், கொழும்பு அட்சகராகிய வந்தனைக்குரிய அபெனுயகா அடிகளாருக்கு அளித்த வரவேற்பின்போது ஆணித்தரமான இரு உபதேசங்களை அவர் அளித்தார். தனக்கு அன்று அவர்கள் அளித்த உபசாரம் தனக்கன்று, தனது அதிகாரத்தினுல் குறிக்கப்படும் யேசுபெருமானுக்கே அளிக்கப்பட்டது என்ருர். அன்று யேசுபெருமானை யெருசலேம் நகருக்குள் அழைத்துச் சென்றபோது அந்நகரவாசிகள் அவர் சென்ற வழியில் நிலப்பாவாடை விரித்து, அவரைக் கழுதைமேலிருத்தி அக்கழுதை அப்பாவாடையில் மிதித்துவர அவரை அழைத்துச்சென்றதை அவர் நகைச்சுவை ததும்பக் குறிப்பிட்டு கழுதை போன்ற தன்னை நிலப்பாவாடைமீது அழைத்துச்சென்று அளித்த மதிப்பு யேசுநாதரின் அதிகாரம் தன்மீது சுமத்தப்பட்டதற்காகவே எனக் குறிப்பிட்டார். அத்துடன் அவர் ஆற்றிய சொற்பொழிவில், பெற்ருேரையும் ஆசிரியர்களையும், கல்விகற்கும் செல்வங்களாகிய சிருருக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டிக் கொண்டார்.

## குடும்பத்தில் பிள்ளைகள் தொகை அதிகரித்தால் கூடிய வரியா?

இங்கிலாந்து இராணி எலிசபேத் அம்மையாரின் கணவன் பிலிப் கோமகன் குடும்பத்தின் தொகையைக் கட்டுப்படுத்த கேடான ஒரு முறையைச் சுட்டிக்காட்டியது பல மக்கள் மனதில் கசப்பை உண்டுபண்ணியிருக்கிறது. அவர் காட்டியிருக்கும் முறை யாதெனில் இரண்டு பிள்ளைகளுக்கு அதிகம் பெறும் பெற்ருேர்களுக்கு விசேஷவரி விதிப்பதாகும். இம் முறையைச் சாதாரண பிரசை ஒருவன் பாராட்டினுல் இப்போது ஏற்பட்டிருக்கும் கசப்பு அத்தகைய பெரிதாக இருக்கமாட்டாது. ஆனுல் அரசகோமகன் மனதில் இது உதித்ததே பெரிதும் வியப்பாயிருக்கின்றது. சென்ற பலவருடங்களாகப் பாப்பரசர் பலர் வரைந்துள்ள நிருபங்களில் ஒருவன் பெறும் சம்பளம் அவனது குடும்பத்தின் தொகையை மதித்து அளிக்கப்படவேண்டுமெனக் கூறப்பட்டிருக்கின்றது. நோர்வே, சுவீடன் முதலிய தேசங்கள்தான் பாப்பாசர் கூறியுள்ள உபதேசத்தை முற்றிலும் செவிமடுத்து அவ்வாறு ஒழுகிவரும் தேசங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேராசிரியர்
## திரு. N. ஜேம்ஸ்
### சமாதானநீதவானுகிருர்

சில்லாலைவாசரும், பேர் பெற்ற ஆசிரியரும், சிறந்த சமூகசேவையாளருமான திரு. N. ஜேம்ஸ் அவர்கள் அண்மையில் சமாதான நீதவானுக நியமிக்கப்பட்டிருக்கிருர் என்றறிந்து சந்தோஷமானேம். ஆசிரியசேவையில் 40 வருடங்களாக அயராது உழைத்த இவர் சுமார் கால் நூற்றூண்டுக்குமேல் மாதகல் சஞ் சூசையப்பர் ஆங்கில உயர் கலாசாலையின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுக்கொண்டவர். ஆசிரிய வேலையில் அமர்ந்துகொண்ட அக்காலந் தொடங்கியே சமூகசேவையில் ஈடுபட்டுக்கொண்டவர். நீர்வளம் நிலவளம் பொருந்திய சில்லாலைவாசிகளின் ஆன்ம கலாச்சார, பொருளாதார முன்னேற்ற முயற்சிகளில் திரு. ஜேம்ஸ் முக்கியபங்கை எடுத்துவந்திருக்கிருர். இவரது சேவையின் சிறப்புக்கு இவர் நிலைநாட்ட உதவிய ஆன்ம கழகங்களும், வாலிபர் மாதர் சங்கங்களும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், சில்லாலை மோட்டார் பஸ்சேவையும் என்றும் சாட்சிபகரும். பண்டைத் தரிப்புக் கோவிற்பற்றில் இன்று சிறப்புற்றுவிளங்கும் மின்தறி கைத்தறி நெசவுச் சாலைகள் உட்பட பல நிறுவனங்கள் இவரது உழைப்பின். பயன்களாம். இவரின் தொண்டு இன்னும்வளர்க.

### திரு.எம். எஸ். பேரின்பநாயகம்
## புதிய சமாதான நீதவான்

குருநகர்வாசரும், யாழ்ப்பாண மாநகரசபையிலே இரண்டாம் வட்டாரம் அங்கத்தவருமான திரு. எம். எஸ். பேரின்பநாயகம் எம். எம். சி. அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சமாதான நீதவானுக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றூர். இவர் சென்ற 31ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாண நீதிமன்றஞ் சென்று யாழ்ப்பாண மாவட்டநீதிபதி திரு. ஏ. டி. ரி. வைத்தியலிங்கம் அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணஞ்செய்து கொண்டார்.

பின்னர் புதிய சமாதான நீதவான் நீதிமன்றத்தைவிட்டு வெளிக்கொண்டதும் புஷ்பாரங்கள் சூட்டப்பெற்று ஊர்வலமாகத் தமது இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பெற்று அங்கே அவருக்குப் பரிமளிப்பான வரவேற்பு நடைபெறலாயிற்று.

## நல்லூரர் சுவாமி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உதவ ஒருபோதும் தயங்கினூல்லர். அப்படியிருந்தும், ஆரியம் என்னும் மந்திரச் சொல்லில் மயங்கிக்கிடந்த அச் சங்கத்தார் சிங்கள மொழி முற்றும் அல்லது பெரும்பகுதி ஆரியமே என்று வாதித்தார். எனவே, "சிங்களத்திலே திராவிடத்தின் பங்கு" என்ற அவரது தலைசிறந்த மொழி இயல் ஆய்வைப் பிரசுரிக்க மறுத்தனர். என்னே அவர்கள் பிரமிப்பு! சர்வதேச புகழ் பெற்ற சனசாதி மொழிநூற் சஞ்சிகையான "அந்துறுெபொஸ்" அவருரையை 1937இல், 32ஆம் காண்டம் 155—170ஆம் பக்கங்களில் வெளியிட்டது. அதன்பின் இந்தப் புதிய சலமோனைச் சந்திக்கச் சேபா அரசி போல வந்தார் மொகெஞ்சடாரோ விற்பன்னர் கோரஸ் அடிகள். இதனுல் வட மொழிப் புலவனின் வாய்மொழி வாய்மையானது.

வித்வாத்வம் சன்பாத்வம் சானைவாத்துல்யம், கடாச்சணஸ்வதேசே புச்யாட்டேரூசா வித்வன் சர்வாத்ற புச்யாட்டே.

அதன் தமிழ்ச்சாரம் (மூதுரை 26).

**மன்னனும் மாசறக்**
**கற்ரேனும் சீர்தூக்கின்**
**மன்னனிற் கற்ரேன்**
**சிறப்புடையன் —**
**மன்னர்க்குத்**
**தன்தேச மல்லாற்**
**சிறப்பில்லைக் கற்ரேர்க்குச்**
**சென்ற இடமெல்லாம் சிறப்பு.**

மூலம் :—
கலாநிதி தாவிதடிகள்
ஆங்கில பாதுகாவலன்
26-12.1947.

## திரு. எஸ். பி. அந்தோனிப்பிள்ளை அவர்களின் தேகவியோகம்

ஏழாலை வாசரும், நமது அச்சகத்திலே நாற்பது ஆண்டுகளுக்குமேல் கடமையாற்றி இளைப்பாறியவருமான திரு. சின்னத்தம்பி பிராங்க் அந்தோனிப்பிள்ளை அவர்கள் விருத்தாப்பிய நோய் கண்டிருந்து அந்திம தேவதிரவிய அனுமானங்கள் யாவும் நிறைவுறப்பெற்று சென்ற 29-1-72 சனிக்கிழமை தமது வாசஸ்தலத்தில் காலஞ்செல்லலாயினூர். மரிக்கும்போது இவருக்கு வயது 81. இவர் தேவ பக்தியில் சிறந்த ஓர் உத்தமர். மறுநாள் பிற்பகல் 4 மணிக்கு இவரது பிரேதஅடக்கம் இசிதோர் கோவில் சேமக்காலையில் திரளான இனசனர், அன்பர்கள், அனுதாபிகள் மத்தியில் சிறப்பாக நடந்தேறியது. அன்னுரை இழந்து தயருறும் அனைவரோடும நாமும் அனுதாபப்படுகின்ரேம். ஆன்மா சாந்தியடைவதாக.

## இலங்கைக் கலாசார சபைப் பரிசுகள்

1970-ம் ஆண்டில் வெளியான சிறந்த நூல்களுக்கு இலங்கைக் கலாசார சபையின் பரிசளிப்பு விழா தை மாதம் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரத்தினபுரியில் சாஹித்ய விழாவாக நடைபெறவிருக்கிறது. கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கொபல்லாவை பரிசுகளை வழங்குவார்.

பரிசு பெறும் தமிழ்ப் படைப்புகள் விபரம் வருமாறு :

கதைகள்— ரூபா ஆயிரம் பரிசு. தகுதிவாய்ந்த படைப்பு எதுவும் இன்மையால் வழங்கப்படவில்லை.

கவிதைகள்— ரூபா ஆயிரம் பரிசு.

எஸ். அமிர்தநாதர் எழுதிய "பிள்ளைத் தமிழ்", கே. வீரகத்தி எழுதிய "செழுங்கமலச் சிலம்பொலி" ஆகிய இரு நூல்களுக்கும பகிர்ந்து வழங்கப்படுகிறது.

பல்வகை விஷயங்கள் —

(1) ரூபா ஆயிரம் பரிசு— எம். தளையசிங்கம் எழுதிய "போர்ப்பறை", ஏ. ஜே. கனகரத்தினம் எழுதிய "மத்து" ஆகிய இரு நூல்களுக்கும் பகிர்ந்து வழங்கப்படுகிறது.

(2) ரூபா ஆயிரம் பரிசு— இதற்குத் தகுதிவாய்ந்த படைப்புகள் கிடைக்காததால் வழங்கப்படவில்லை.

# செய்திகள்

### சிங்கள ஆசிரியரும் தமிழும்

போதனை, உடுநுவரை, யட்டிநுவரை ஆகியாமிடங்களிலே சிங்கள ஆசிரியர்கள் தமிழ்மொழியைக் கற்பதில் ஆர்வம் காண்பித்து வருகின்ருர்கள். இவர்களுக்கான தமிழ் வகுப்புக்களை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஜி.சி.ஈ. பரீட்சைப் புதிய பாடத்தின் மூன்ருவது மொழியாகத் தமிழ் சேர்க்கப்பட்டிருப்பதாலே அதனைக் கற்றுத் தேறுவதற்கு அவர்கள் ஆர்வம் காட்டி வருகின்ருர்களாம்.

### கல்லுண்டாய் உப்பளம்

வலிகாமம் மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் பொறுப்பில் இருந்துவரும் கல்லுண்டாய் உப்பளத்தை உப்புக் கூட்டுத்தாபனம் கையேற்கவிருக்கிறது. இந்த உப்பளத்தின் பெறுமதி ஒன்றேகால்லட்சம் ரூபாவெனக் கூட்டுத்தாபனம் மதிப்பிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### சிங்களப் பெற்ருரும் தமிழும்

பதுளை மகாவித்தியாலயத்தில் தமிழ்மொழியை மூன்ருவது பாடமாகக் கற்பிக்க நடவடிக்கை எடுக்கும்படியாய்க் கல்விமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை அம்மகாவித்தியாலய சிங்களப்பெற்ருர் - ஆசிரியர் சங்கம் நிறைவேற்றியிருக்கிறது. இது விஷயமாய் நடைபெற்ற சங்க கூட்டத்திலே சிங்களமாணவர்களுக்குத் தமிழ்கற்பிப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

### பாலர் பாடசாலைகள்

ஐந்துவயதுப் பிள்ளைகளுக்குக் கல்விபயிற்றுவதற்கென நாட்டின் சகல பகுதிகளிலும் வருகிற ஆனிமாதத்தில் பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. நாடு முழுவதிலும் தற்போது ஐந்துவயதுக்கும், ஆறுவயதுக்கும இடைப்பட்டவர்களாய் மூன்றுலட்சம் பிள்ளைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. பாலர் பாடசாலைகளை ஆரம்பித்து நடத்த அரசாங்கத்திற்கு மாதம் ஒன்றுக்குச் சுமார் 1 கோடியே 50 லட்சம் ரூபா தேவைப்படுமெனச் சமூக சேவைகள் அமைச்சு மதிப்பிட்டுள்ளது. சமூக சேவைகள் மந்திரி நாட்டிலுள்ள பல்வேறு சமூகசேவை ஸ்தாபனங்களினதும் உதவியுடன் இத்திட்டத்தைச் செயற்படுத்த முன்வந்திருக்கிருர். பாலர் பாடசாலைகளில் கல்வி பயிற்றக் கல்விப் பொதுத்தராதரப்பத்திர பரீட்சையில சித்தியடைந்தவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

### 20மாணவருக்கு ஓர் ஆசிரியர்

பாடசாலைகளிலே எட்டாம் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்களில் குறைந்தபட்சம் இருபதுபேருக்கு ஐந்து ஆசிரியர்வீதம் நியமிக்கும் திட்டம் ஒன்றைக் கல்வி அமைச்சு தயாரித்துவருகிறது. பாடசாலைகள் பலவற்றிலும் மேல்வகுப்புகளில் மாணவர்கள்தொகை மிதமிஞ்சியிருப்பதாகவும், மற்றும் ஆசிரியர்பற்ருக்குறை இருந்துவருவதாகவும் செய்யப்பட்ட முறையீடுகளைத் தொடர்ந்தே கல்விஅமைச்சு இப்புதிய திட்டத்தைத் தயாரித்துவருகின்றது.

✠

## வஸ்தியாம்பிள்ளை இம்மனுவேல் அவர்கள்
## பரமபதமடைந்த 11-ம் வருட ஞாபகம்

தோற்றம் : 12-2-1889 — மறைவு : 4-2-1961

"சீவியத்தில் இவரை நேசித்தவாகளே மரணத்திலும் மறவாதீர்கள்".

இவர் எங்களைவிட்டுப் பரலோக பிராப்தியான 11ஆம் வருடம் மாசி மாதம் 4ஆந் திகதி பூர்த்தியாகிறபடியால் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒரு துக்கப் பாடற் பூசை 5ஆந் திகதி காலை அர்ச். ஆரோக்கியமாதா கோவிலில் ஒப்புக் கொடுக்கப்படும். இதைக் கண்ணுறுவோர் அவருக்காக விசேஷவிதமாக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

நித்திய ஒளி இவர்மீது ஒளிர்வதாக.

சில்லாலை. மனைவி

A/10-72

✠

## தொம்மைப்பிள்ளை இராயப்பு தம்பிராசா அவர்களின் முதலாண்டு மரணநினைவு

தோற்றம் : 1-8-1896. — மறைவு : 8-2-1971.

"ஆண்டவரில் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்."

இளைப்பாறிய மதுபான இலாகா உத்தியோகத்தர் திரு தொம்மைப்பிள்ளை இராயப்பு தம்பிராசா இறைவனடிசேர்ந்த முதலாம் வருட நிறைவை நினைவுகூர்ந்து அன்னுரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக 8-2-72 செவ்வாய்க்கிழமை பி. ப. 5-30மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயத்தில் நிறைவேறும் துக்கப் பலிபூசையில் பங்குபற்றுமாறு இதைக் கண்ணுறும் விசுவாசிகள் அனைவரும் கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

பிரிவால் துயருறும் :

**மனைவி:** ரோசமரியரத்தினம்.
**மக்கள்:** அன்ரன், ரோஸ், செபஸ்தியன்.
**மருமக்கள்:** அருளானந்தம், புஷ்பருணி.

❋ 2000 ஆம் ஆண்டுக்கு முன் சந்திரனில் மனிதர் குடியேறி விடுவார்களென்றும், அங்கு முதல் மனித குழந்தை பிறந்து வளர்ந்து பின்னர் கல்லூரிப்படிப்புக்காகப் பூமிக்குத் திரும்பும் என்றும் முதன்மை வாய்ந்த அமெரிக்க வானவெளி நிபுணரான டக்றர் வொன் புறோன் கூறுகின்ருர், எதிர்காலத்திலே சந்திரனிலும், செவ்வாயிலும் நிகர்தாமான ஆராய்ச்சி நிலையங்களைக் கொண்டிருக்க முடியுமென்றும் அவர் தெரிவிக்கின்ருர்.

## திரு. பி. கே. யோண்பிள்ளை அவர்களின் மறைவு

காவலூர் உதயதிசை வாசரும், உதயதிசை புனித அந்தோனியார் ஆலய பிரதம கட்டளைகாரனும், கொழும்புத் துறைமுகத்தில் பிரபலம்வாய்ந்த சிருங்காகக் கடமையாற்றி இளைப்பாறியவரும், ராசமாணிக்கத்தின் அன்புக் கணவரும், திரு. கிங்ஸ்ரன் யோண்பிள்ளை, செல்விகளான லலிதா, கமலா, ராசேஸ்வரி ஆகியோரின் அருமைத் தந்தையுமான திரு. பிடேலிஸ் குருசுமுத்து யோண்பிள்ளை அவர்கள் வயோதிப நோயினுல் பீடிக்கப்பட்டு தைமாதம் 3-ந்தேதி தமது 81ஆம் பராயத்தில் நித்திய நித்திரையாயினர்.

இவர் செல்வஞ் செல்வாக்குப் பெற்ற சீரியகுடும்பத்தில்தோன்றியவர். காலஞ்சென்ற வண. எஸ். ஏ. ஞானப்பிரகாசம் சுவாமியார் அவர்களுக்கு வலக்கையும், இடக்கையுமாகநின்று ஒத்துழைத்தவரும் இவரேயாவர்.

இவரது பிரேத அடக்கம் மறுநாள் சாயந்தரம் கொழும்பு,மன்ஞர், யாழ்ப்பாணம், சாவகச்சேரி முதலாமிடங்களில் இருந்துவந்த பெருந்திரளான மக்கள்சூழ ஊர்காவற்றுறைசேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படலாயிற்று. இவரைஇழந்து ஆகுலமுறும் மனைவி, மக்கள், சகோதரர், இனசனர் முதலானவர்களுடன் நானும் அனுதாபப்படுகிறேன். இவரது ஆன்மா சாந்தியுறுவதாக.

காவலூர்க் கவிஞர்
ஞா. ம. செல்வராசா,
ஊர்காவற்றுறை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஞு மாசி மாதம் 5-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org